# விலைக்கேள்விக்கான கோரல் (IFB -2021/03)

# மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,வடமாகாணம்

1. வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள அமைச்சு பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.

2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

3. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (**CIDA**) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.

4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் **Bidding Data** (பகுதி2) இல் குறிப்பிடப்பட்டுள்ளன மற்றும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் **Contract Data** (பகுதி4) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே **6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், அம் முகவரியில் மு.ப **9.00** மணியிலிருந்து பி.ப **4.00** மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.

6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் ,வடக்கு மாகாணம், சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021-222 0819, தொலைநகல் 021-222 0818) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை கீழே அட்டவணையில் காட்டப்பட்ட காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையில் சமர்ப்பித்து** கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதி **மு.ப 10.30** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தவிசாளர், மாகாண அமைச்சு பெறுகைக்குழு, மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம், சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்**. காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.

8. கேள்வி தொடர்பான முதற் கூட்டம், மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் **மு.ப 10.30** மணிக்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதியில் நடைபெறும்

9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி ஆவணம் வழங்கும்/பெற்றுக்கொள்ளும் காலம் | | **18.05.2021** முதல் **07.06.2021** வரை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கேள்வி தொடர்பான முதற் கூட்டம் | | **31.05.2021** அன்று மு.ப **10.30** | | | | | | |
| கேள்வி மூடுதல்/திறத்தல் | | **08.06.2021** அன்று மு.ப **10.30** | | | | | | |
| கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை(ரூ) (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | மீளளிக்கப்படாத தொகை(ரூ) | கேள்விப் பிணை விபரம். | |
| | | | | | | தொகை (ரூ) | தேவைப்படும் காலம். |
| NP/B/JA/23(2021) | யாழ்ப்பாணம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தாதியர் விடுதி நிர்மாணித்தல் | 128.00 | 294 நாட்கள் | C4 or C3 (கட்டடங்கள்) | 25,000.00 | 1,280,000.00 | 04.10.2021 வரை |
| **இக்கேள்வியின் போது 09.10.2020 மற்றும் 11.01.2021 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இல முறையே 03/2020 மற்றும் 03/2020(i) என்பன பின்பற்றப்படும்.** | | | | | | | |

தவிசாளர்

மாகாண அமைச்சு பெறுகைக்குழு

மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

வடமாகாணம்